## தலைப்பு – 115 பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்திகளில் அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பகுதியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு, மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் காண்புகள், என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு கொடுக்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்பன எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணி வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும்

இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்துதல் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு 167.55 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் 162.50 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சின் தேறிய நிதிஏற்பாட்டிலான சேமிப்பு 5.04 மில்லியனாக இருந்ததுடன் இது தேறிய ஏற்பாட்டில் 3.01 சதவீதமாக காணப்பட்டது. விபரம் பின்வருமாறு

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 133.50 | 132.18 | 1.32 | 0.99 |
| மூலதனம் | 34.05 | 30.33 | 3.72 | 10.93 |
| மொத்தம் | 167.55 | 162.51 | 5.04 | **3.01** |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2014 ஆண்டுக்கான வருமானக் குறியீடு 20.03.02.21 இன் கீழ் வருமானம் மதிப்பிட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் ரூபா 21.4 வருமானம் மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.2 முற்பணக் கணக்குகள்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு.

| விடய இலக்கம் | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 11501 | 3.0 | 2.6 | 1.8 | 2.5 | 12.5 | 9.6 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 7002/0000/00/0336/0014/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 896,450 ஆகும்.

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையின் அவதானிப்புகளுக்குமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. **தலைப்பு 115 – பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு**

**3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததோடு சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| வாகனப் பட்டியல்படுத்தல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(உ) | பேணப்8பட்டிருக்கவில்லை. |
| நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| உத்தியோகபூர்வ வாகனம் தொடர்பான சம்பவக் குறிப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1645(அ) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,275,124 கூட்டுத்தொகையான 3 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய பட்டியல்கள் / பற்றுச்சீட்டுக்கள் / புதுப்பித்தலுக்கான அறிவித்தல் போன்ற அவசியமான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குழாமுக்கு உரித்தான 09 வாகனங்களுக்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,015,711 எரிபொருள் செலவினமாக செலவிடப்பட்டிருந்ததெனினும், அந்த செலவினங்களை சான்றுறுதிப்படுத்துவதற்கு தேவையான நாளாந்த ஓட்ட அட்டவணைகள், பயணம் தொடர்பான மாதாந்த பொழிப்பறிக்கை மற்றும் எரிபொருள் நுகர்வினைப் பரீட்சிக்கும் அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் அமைச்சும் இலங்கை மன்றக் கல்லூரியும் இணைந்து நடாத்தியிருந்த செயற்திட்ட முகாமைத்துவ செயலமர்வுக்காக அமைச்சிலிருந்து பங்கேற்ற அதிகாரிகளின் கையொப்பப் பதிவேடொன்றோ அல்லது அதிகாரிகளின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கு போதுமான சான்றுகளோ கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

----------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்குகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டு முரண்

-----------------------

03 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான மீதி அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 24 சதவீதம் முதல் 63 சதவீதம் வரையிலான வீச்செல்லையினை கொண்டிருந்தது.

(ஆ) நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்படல்

---------------------------------------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்பட முடியாதிருப்பினும் தலைப்பின் கீழ் 9 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டின் பயன்பாட்டின் பின்னரான ரூபா 745,092 மீதியை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது.

**3.4 கட்டுநிதிக் கணக்கு**

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 371 குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 04 பதவி நிலைத்தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 12 சந்தர்ப்பங்களில் ரூபா 154,000 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு முடிவடைந்த உடனேயே பெற்றுக்கொண்ட செயல் நிமித்த உப கட்டுநிதியை செலுத்த

வேண்டியிருப்பினும், 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 119,700 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதியை செயற்பாடு முடிவடைந்து 22 தொடக்கம் 56 நாட்கள் வரையிலான வீச்சிலான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

### 3.5 வருமானக் கணக்கு

---------------------------------------

அமைச்சின் செயலாளர் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.21 ஆம் இலக்க வருமான குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீட்டை ஒழுங்குபடுத்தல், வருமானம் திரட்டுதல், கணக்கு வைத்தல் மற்றும் கணக்கை சமர்ப்பித்தல் ஆகிய பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமான குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஏப்ரல் 29 ஆந் திகதிய 01/2002(xviii) ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சிற்குரிய வருமானத்தை மதிப்பிடுதல், கூட்டுதல், வெளியிடுதல் போன்றவற்றுடன் தொடர்புடைய பொறுப்பு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கே வழங்கப்பட்டிருந்ததெனினும் அதற்கிணங்க வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 21,384,958 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உராய்வு எண்ணெய் (Lubricant) இறக்குமதி தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் ஹய்ரெக்ஸ் எண்ணெய் கம்பனிக்கும் (M/S Hyrax Oil SDN, BHS, Malaysia) இடையில் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை (2008-2013) 2013 ஒக்டோபர் 17 ஆம் திகதி முடிவடைந்திருப்பினும் கணக்காய்வை மேற்கொண்ட 2015 மே 22 ஆம் திகதி வரையிலும் புதிய உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---------------------------------------------------------------------------------

பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத மொத்தம் ரூபா 58,161 கூட்டுப்பெறுமதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டுமெனவும், ரூபா 23,610 கூட்டுப்பெறுமதியான பொருட்கள் அழிக்கப்பட வேண்டுமெனவும், 2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு சபையினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. 2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்கு உரித்தான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதது என குறிப்பிடப்பட்டிருந்த முறையே ரூபா 76,115 மற்றும் ரூபா 122,156 பெறுமதியான பொருட்கள் தொடர்பில் அமைச்சினால் 2014 டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்

---------------------------------------------------------------------------------------------------------------------

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருந்த சில சொத்துக்கள் முறையான அனுமதியின்றி அமைச்சினால் பாவனைக்குட்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே உள்ளது

(i) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 5 வாகனங்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அந்த 5 வாகனங்களுக்காகவும் அமைச்சினால் வாகன பராமரித்தல் செலவாக ரூபா 2,364,603 தொகையும் கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் செலவாக ரூபா 806,563 தொகையும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது.

(ii) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனம் அமைச்சரின் இணைப்புச் செயலாளரினால் மீளாய்வாண்டில் அடிக்கடி பாவிக்கப்பட்டிருந்தது.

## 3.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| நிதிப் பிரமாணம் 1646 | | குழாமுக்கு உரித்தான 09 வாகனங்கள் 2014 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2015 ஜுன் 30 ஆம் திகதி வரையான 18 மாத காலப்பகுதிக்குரிய நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் பயணம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதி என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சனாதிபதி செயலாளர் அலுவலகத்தின் சுற்றறிக்கை | | |
| 2010 மே 14 ஆம் திகதிய சீ/ஏ1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | | |
| (i) 3:1 ஆம் பந்தி | | அமைச்சரின் பாவனைக்கும் பாதுகாப்பு விடயங்களுக்குமாக வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்தாலும் அமைச்சரால் 05 அரச வாகனங்கள் பாவிக்கப்பட்டிருந்தன. |
| (ii) 3:3 ஆம் பந்தி | | நிதி, திட்டமிடல் அமைச்சின் முன் அனுமதியின்றி அமைச்சரின் மற்றும் பிரதி அமைச்சரின் பாவனைக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 7 வாகனங்கள் பாவிக்கப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | (iii) 3:4 ஆம் பந்தி | - | உத்தியோகபூர்வ வாகனம் அல்லது போக்குவரத்துப் படியை பெற்றுக் கொள்ளும் அமைச்சின் காரியாலயத்திற்கு உரித்தான உத்தியோகத்தர்கள் குழாமிற்கு உரித்தான வாகனமொன்றை வேறுபடுத்தி வைத்து பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>-----------------------------------------<br>1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2:11 ஆம் பந்தி | | அமைச்சிற்கு உரித்தான 14 வாகனங்களுக்குரிய ஒவ்வொரு 6 மாதங்களிற்கு ஒரு முறை செய்யப்பட வேண்டிய எரிபொருள் நுகர்வு பரிசோதனை கடந்த 03 ஆண்டுகளுக்கு மேலாக செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கை<br>-------------------------------------------------------<br>2013 ஏப்ரலில் 16 ஆந் திகதிய HRD/CHI/S/194 ஆம் இலக்க வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கை கடிதம் | | சிங்கப்பூரில் நடைபெற்ற செயலமர்வொன்றிற்காக அமைச்சிலிருந்து பங்கேற்ற பெண் உத்தியோகத்தரொருவரால் பெற்றுக் கொண்ட பயிற்சி தொடர்பான அறிக்கை நிதி, திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கோ அல்லது அமைச்சின் செயலாளருக்கோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை<br>--------------------------------------<br>2010 ஏப்ரல் 29 ஆந் திகதிய 146 ஆம் இலக்க சுற்றிக்கையின் 01 ஆம் பந்தி | 822,000 | அமைச்சரின் அலுவலகம், பிரதி அமைச்சரின் அலுவலகம் மற்றும் அமைச்சுச் செயலாளரின் அலுவலகம் என்பவற்றை ஒரே இடத்தில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | ஓய்வூதிய கொடுப்பனவுச் சுற்றறிக்கை<br>------------------------------------------------------<br>2014 ஜனவரி 10 ஆந் திகதிய 2014/61 ஆம் இலக்க | 59,072 | அமைச்சரின் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக சேவையாற்றிய ஓய்வு பெற்ற அரச |

| | |
|---|---|
| சுற்றறிக்கை | உத்தியோகத்தருக்குரிய சம்பளத்திற்கு மேலதிகமாக ஓய்வூதியத்திற்குரிய வாழ்க்கைப்படி கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்தது. |

**3.8 உள்நாட்டு நிதியிடல் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்**

---

செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடுதல், செயற்திட்டத்தை முடிவுறுத்தாமல் கைவிடுதல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வு தெரிவுப் பரீட்சையின் போது அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) 43 ஆண்டுகள் பழமைவாய்ந்த சபுகஸ்கந்த எண்ணெய்ச் சுத்திகரிப்புக்கு மிகவும் குறைந்த இயலளவுடன் செயற்பட்டதாகவும், அது தற்போது காணப்படும் எந்தவொரு மசகு எண்ணெய் வகையினையும் சுத்திகரிப்பதற்கு முடியுமான உயர்ந்த தொழில்நுட்ப உபகரணங்களுடன் கூடிய உயர் தரத்திலான நவீனமயப்படுத்தும் தேவைப்பாடு காணப்படுகிறது. இதற்காக பொருத்தமான நவீனமயப்படுத்தல் மற்றும் விரிவாககச் செயற்திட்டம் 2015 ஜூலை 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க எரிபொருள் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், அந்நிய செலவாணியை நாட்டிற்கு மீதப்படுத்தல், இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய்யின் தன்மை தொடர்பாக நிலவும் குறைபாடுகளை குறைத்தல், முடிவுற்ற எரிபொருள் (Finished Products) இறக்குமதிக்காக செலவிடப்படும் அதிக கிரயத்தை குறைத்தல், இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெயை உள்நாட்டில் சுத்திகரிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் எண்ணெய் உற்பத்தியின் பொருளாதார நலனைப் பெற்றுக்கொள்ளல், குறைந்த விலையில் காணப்படும் மசகு எண்ணெயினை (Heavy Crade Oil) பயன்படுத்துவதற்கு கிடைக்கும் இயலுமை மற்றும் செயற்பாட்டு இலாபத் தன்மையை அதிகரிக்கக் கூடிய இயலுமையை பெறல் போன்ற சாதகமான நிலைமையை இலங்கைக்கு அடைந்து கொள்வதற்கு உள்ள இயலுமை விடுபட்டு இருந்தன.

(ஆ) தற்போது காணப்படும் 43 ஆண்டுகள் மற்றும் 70 ஆண்டுகள் பழமையான மசகு எண்ணெய் போக்குவரத்துச் செய்யப்படும் குழாய்வழிக் கட்டமைப்பு அதன் எளிய ஆயட்காலமான 25 ஆண்டுகளை மிகைத்து நீண்ட காலமாக செயற்திறனற்றதாக இந் நாட்டின் முடிவுற்ற மசகு எண்ணெய்யின் தேவைப்பாட்டின் 2/3 அளவில் பூர்த்தி செய்கின்றது. அவ்வாறு சேதமடைந்துள்ள குழாய்வழிகள் மூலம் போக்குவரத்துச் செய்தல்

அபாயகரமானதாக இருந்தமையால் நாட்டில் காணப்படும் குழாய் வழிகளை புனரமைக்கும் செயற்திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஜுலை 31 ஆந் திகதி வரையிலும் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் பெற்றோலியப் போக்குவரத்தினை செயற்திறனாக மேற்கொள்ளல், நுகர்வோருக்கு கிடைக்கும் பெற்றோலியத்தின் உயர்ந்த தரம், எதிர்காலத்தில் அதிகரிக்கும் கேள்வியினை நிறைவேற்றுதல், பெற்றோலிய இருப்புக்கள் குறைவதினால் ஏற்படும் நட்டங்கள் மற்றும் நிதி நட்டங்களைக் குறைத்தல் பழுதடைந்த குழாய் வழிகளைப் பராமரிக்கும் கிரயத்தைக் குறைத்தல், போன்ற சாதகமான நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் நாட்டிற்கு இழக்கப்பட்டிருந்தன.

(இ) பண்டாராநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நிலக்கீழ் குழாய் வழி முறைமை ரூபா 1,000 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்காக ரூபா 5 மில்லியன் செலவு செய்து தொழில்நுட்ப சாத்தியவள ஆய்வொன்று 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்தது. அதன் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு 2015 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு சில கொடுக்கல் வாங்கல்கள் சச்சரவுத் தன்மையானவையாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல்வாங்கல்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது. அவ்வாறான

(அ) அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் அலுவலகங்களின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் தொடர்பில் எவ்வித உறுதிப்படுத்தலும் அற்ற நிலையில் மேலதிக நேரம், விடுமுறை தின கொடுப்பனவு மற்றும் பிரயாணச் செலவாக ரூபா 3,872,652 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர்களின் வருகைகள் மற்றும் வெளியேற்றல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான அவசியமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் பதவியணியினர் பயிற்சியளித்தல் செலவின விடயத்திற்காக ரூபா 360,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஏற்பாட்டை பயன்படுத்திக்கொண்டு இலங்கை பெற்றோலிய

கூட்டுத்தாபனத்தினதும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன இருப்புக் கணக்கில் இறங்குதுறை கம்பனியினதும் 20 உத்தியோகத்தர்களினது பயிற்சி விடயங்களுக்காக அந்த ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சினால் செலவு செய்யப்பட்ட நிதி மீண்டும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் அமைச்சு ஈடுபட்டிருக்கவில்லை.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------

அமைச்சின் காரியாலயத்திலே பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தருக்கு டீசல் வாகனமொன்று இணைப்புச் செய்து மாதாந்தம் ரூபா 25,724 டீசலுக்கான எரிபொருள் படி செலுத்த வேண்டியிருந்தது. எனினும், அமைச்சினால் 9 மாத கால எல்லைக்காக டீசலுக்கான எரிபொருள் படிக்குப் பதிலாக பெற்றோலுக்கான எரிபொருள் படியாக ரூபா 35,376 மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த படிகளில் ரூபா 21,176 தொகை 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு முடியாது போயிருந்தது.

## 3.11 நட்டங்களும் சேதங்களும்

-------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் சேதங்களும் சம்பந்தமான அவதானிப்புகள் கீழே காணப்படுகின்றன.

(அ) இலங்கை மன்றக் கல்லூரியின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட தாய்லாந்தின் பேங்கொக் நகரில் இடம்பெற்ற பயிற்சி பாடநெறி ஒன்றிற்கு பங்கேற்பதற்காக அமைச்சில் பதிற் கடமையாற்றும் மேலதிக செயலாளருக்காக ரூபா 99,000 அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர் குறிப்பிட்ட பயிற்சி பாடநெறியில் பங்கேற்காமல் இருந்ததோடு அதற்காக செலுத்திய பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் திடீர் விபத்து காரணமாக அமைச்சன் 2 வாகனங்களுக்கு நட்ட இழப்பு ஏற்பட்டிருந்தது. அந்த சேதத்தை திருத்தம் செய்வதற்க்காக ரூபா 7,307,949 அமைச்சு செலவு செய்திருந்தது. அதற்காக காப்புறுதி நட்டஈடாக ரூபா 6,529,472 மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்தது. இந்த நட்ட இழப்பு சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104 மற்றும் 109 இன் பிரகாரம் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சர், பிரதி அமைச்சர், அமைச்சு அலுவலகம் மற்றும் பிரதி அமைச்சர் அலுவலகத்தில் சேவையாற்றும் பதவியணியினர் தமது உத்தியோகபூர்வ கடமையிலிருந்து விலகியிருந்ததுடன் அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 333,900 பெறுமதியான 5 வகையான பொருட்கள் மற்றும் பெறுமதி முன்வைக்கப்படாத 10 வகையான 28 பொருட்கள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) பெற்றோலிய கைத்தொழில் அமைச்சின் அருகாமையில் அமைந்துள்ள தனியார் கட்டிடமொன்றை பிரதி அமைச்சர் அலுவலகத்திற்காக வாடகைக்கு பெற்றுக்கொண்டு அதற்காக 2014 ஆம் ஆண்டில் அமைச்சினால் ரூபா 5,484,254 செலவு செய்யப்பட்டிருந்தது. பிரதி அமைச்சரோ அல்லது அவரது பதவியணியினரோ அந்த கட்டிடத்தில் அலுவலகம் நடாத்தியிருக்கவில்லை இருந்தாலும் பிரதி அமைச்சர் அலுவலகம் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் பகுதியொன்றில் நடாத்தப்பட்டிருந்ததோடு, அதற்காக 2014 ஆம் ஆண்டில் அமைச்சினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 10,011,545 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, வாடகைக்கு பெற்றிருந்த தனியார் கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 5,484,254 செலவினம் சிக்கனமற்ற செலவாக காணப்பட்டது.

(ஆ) 2014 செப்தெம்பர் மாதத்திலே ரூபா 6,694,263 செலுத்தி முன்னாள் பிரதி அமைச்சருக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனமொன்று குறிப்பிட்ட காலத்திற்குள் ரூபா 1,714,272 தொகையான தேசிய பிரதிநிதித்துவ கட்டணம் செலுத்தி விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தாமதக் கட்டணமாக மேலும் ரூபா 230,581 இலங்கை துறைமுக அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2014 மார்ச் 31 ஆம் திகதியின் போது அமைச்சு கட்டிட வளாகத்தினுள் Wi-fi இணையத்தள வசதி தாபிக்கப்படுவதற்காக அரச கம்பனி ஒன்றுக்கு ரூபா 1,458,823 அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சினால் இதற்கு முன் பெறப்பட்டிருந்த சேனொலியுடன் இணையத்தள வசதியுடனான டயலொக் 4G

Wi-fi இணைப்பை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கை எடுத்திருக்காததன் காரணத்தினால் 14 மாத கால எல்லைக்காக அந்த தனியார் நிறுவனத்திற்கு ரூபா 61,278 செலுத்த நேர்ந்திருந்தது.

## 3.13 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டில் இலங்கை மன்ற நிறுவகத்துடன் இணைந்து அமைச்சினால் செயற்படுத்தப்பட்டிருந்த பதவியணியினரை பயிற்றுவிக்கும் செயலமர்விற்காக அமைச்சினால் பங்கேற்க இருந்த உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலுக்கு ஏற்ப மூன்று உத்தியோகத்தர்கள் மாத்திரம் செயலமர்வில் பங்குபற்றியிருந்ததுடன், 36 உத்தியோகத்தர்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக ஒரு உத்தியோகத்தருக்காக ரூபா 18,000 வீதம் மூன்று உத்தியோகத்தர்களுக்காக ரூபா 54,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டு அமைச்சின் பதவியணியினரை பயிற்றுவித்தலின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,800,000 பணத்தில் 30.56 சதவீதம் அல்லது ரூபா 550,000 “International Program on Project Management) என்னும் வேலைத்திட்டத்திற்கு பங்குபற்றியிருந்த மேலதிக செயலாளருக்காக (நிர்வாகம்) செலவிடப்பட்டிருந்தது. இருந்த ஏற்பாட்டில் 20 சதவீதம் அல்லது ரூபா 360,000 வெளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காகவும், 5.55 சதவீதம் அல்லது ரூபா 99,900 எந்த உத்தியோகத்தர்களும் பங்குபற்றாத வேலைத்திட்டமொன்றிற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. இதற்கிணங்க, அமைச்சின் ஏனைய பதவியணியினரை பயிற்றுவிப்பதற்காக ரூபா 764,450 அல்லது மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 42.47 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(இ) வாகன பழுது பார்த்தல்கள், வாகன விபத்துக்கள் ஆகிய விபரங்கள் மற்றும் டயர் மற்றும் டியூப் பொருந்துதல் மற்றும் வாகனம் சேவை செய்தல் தொடர்பான விபரங்கள் மற்றும் திகதிகள் உள்ளடக்கப்பட்டு வாகன சம்பவக் குறிப்பு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை மற்றும் அமைச்சிற்கு உரிய வாகனங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கிய பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாகனத் பழுதுபார்த்தலின் போது அகற்றப்பட்ட பாகங்களை மீண்டும் களஞ்சியத்திற்கு கையளித்தல் அல்லது அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) அமைச்சினால் 2014 ஆம் ஆண்டில் 22 வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா 5,404,849 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வாகன திருத்தங்களுக்காக தொடர்புபடுத்தும் போது அது தொடர்பாக விஷேட அறிவினைக் கொண்ட சுயாதீன நபர்களைக் கொண்டு அல்லது நிறுவனமொன்றின் மூலம் வாகனத்தை பரீட்சித்து மதிப்பீடொன்றைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பழுதுபார்த்தலின் பின்னர் அது முறைப்படி நிறைவேற்றப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளமைக்கான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.14 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 13 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 50 | 40 | 10 |
| (iv) | ஆரம்ப நிலை | 26 | 21 | 05 |
| (v) | வேறு (அமைய/தற்காலிகம் ஒப்பந்த அடிப்படையில்) | 03 | 02 | 01 |
| | மொத்தம் | 96 | 77 | 19 |

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

---

மீளாய்வாண்டின் அமைச்சின் செயற்திட்ட இலக்கம் 02அமைச்சின் நிர்வாக மற்றும் நிறுவகச் சேவைகளின் கீழ் சேர்க்கப்பட்டிருந்த செயற்பாட்டு பதவியணியினரின் உத்தியோகத்தர்கள் இருவர் செயற்திட்ட இலக்கம் 01 இன் கீழ் அமைச்சு அலுவலக ஊடகப் பிரிவில் சேவைக்காக முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களுக்காக அமைச்சின் செயற்திட்ட இலக்கம் 02 -- இன் கீழ் உள்ள ஏற்பாடுகளிலிருந்து ரூபா 472,150 செலவிடப்பட்டிருந்தது.